பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

10 05 2024 7 15

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தல் நடைமுறைகளை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பாராட்டியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

2. கடினமான தருணங்களில் முன்னேறிச் செல்வதற்கான வழிவகைகளை உலக நாடுகளுக்கு இந்திய ஜனநாயகம் எடுத்துக்காட்டுவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

3. ஹரியானாவில் நிலவி வரும் அரசியல் சூழ்நிலைகளுக்கிடையே, அம்மாநில ஆளுநரை இன்று சந்திக்க விருப்பம் தெரிவித்து காங்கிரஸ் கட்சியினர் கடிதம் வழங்கியுள்ளனர்.

4. ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவன பணியாளர்கள் தங்கள் போராட்டத்தை திரும்பப் பெறுவதாக அறிவித்துள்ளனர்.

5. ஜெர்மனியின் **Essen** நகரில் நடைபெற்ற உலக தடகள போட்டியின் ட்ரிபிள் ஜம்ப் பிரிவில் இந்தியாவின் **Eldhose Paul** தங்கப் பதக்கம் வென்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் வாக்குப்திவு முறையைக் கண்டு சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் மகிழ்ச்சியடைந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தேர்தல் ஆணையத்தின் வெளிப்படைத்தன்மை, பசுமை வாக்குச்சாவடிகள் போன்ற முன்னெடுப்பு ஆகியவற்றை அவர்கள் பாராட்டியுள்ளதாக கூறியுள்ளது.

மின்னனு வாக்குப்திவு எந்திரம், விவி பேட் எந்திரம் உள்ளிட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது குறித்து அவர்கள் பாராட்டியதாக தெரிவித்துள்ளது.

இந்தியாவில் தேர்தல் அமைதியாகவும், திருவிழா போன்றும் நடைபெற்று வருவதாக வெளிநாட்டு பிரதிநிதிகள் கூறியுள்ளதாக தேர்தல் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற தேர்தலை வெளிநாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் பார்வையிட்டதை அடுத்து தேர்தல் ஆணையம் இவ்வாறு கூறியுள்ளது.

<<<<>>>>

மக்களவைக்கு 4வது கட்ட தேர்தல் நடைபெற இன்னும் 3 நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்கள் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

தேர்தல் பிரச்சாரம் நாளை மாலையுடன் முடிவடைய உள்ளதையடுத்து, கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவர்களின் ஒருவரான திரு. ராஜ்நாத் சிங், திரு. ஜே.பி. நட்டா ஆகியோர் உத்தரப்பிரதேசத்தில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டனர்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி ரேபரேலி தொகுதியிலும், சமாஜ்வாதி கட்சித்தலைவர் திரு. அகிலேஷ் யாதவ் **Bahraich** தொகுதியிலும், பகுஜன் சமாஜ் கட்சித்தலைவர் செல்வி மாயாவதி, கன்னோஜ் தொகுதியிலும் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

<<<<>>>>

வாக்குப்பதிவின்போது தவறு நடந்ததாக கூறி குஜராத் மாநிலம் **Dahod** மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட **Parthampur** வாக்குச்சாவடியில் நாளை மறுவாக்குப்பதிவு நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து காந்திநகரில் செய்தியாளர்களிடம் பேசிய இணை தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. **AB** பட்டேல், வாக்குப்பதிவின்போது நடைபெற்ற தவறு குறித்த வீடியோ காட்சி பரவியதாகவும், அதன்பிறகு தேர்தல் நடத்தும் அதிகாரி இந்த தவறு குறித்த அறிக்கையை பதிவு செய்த நிலையில், மறுவாக்குப் பதிவு குறித்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக கூறினார்.

இதுதொடர்பாக வாக்குச்சாவடியில் பணியில் இருந்த நான்கு ஊழியர்கள் உட்பட 6 பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று காலை மணி 9.30க்கு வெளியிடப்படுகிறது.

மாணவர்கள் மற்றும் தனித்தேர்வர்களுக்கு அவர்கள் பதிவு செய்த கைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி வழியாக தகவல் அனுப்பப்படும். மேலும், **www.tnresults.nic.in, www.dge.tn.gov.in** என்ற இணையதளம் வாயிலாகவும் முடிவுகளை அறிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

கடினமான தருணங்களில் முன்னேறிச் செல்வதற்கான வழிவகைகளை உலக நாடுகளுக்கு இந்திய ஜனநாயகம் எடுத்துக்காட்டுவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

தில்லியில் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் மாணவர்களிடையே உரையாற்றிய அவர், நாட்டின் 140 கோடி மக்களின் நம்பிக்கை, கனவு மற்றும் விருப்பங்களை நாடாளுமன்றம் பிரதிபலிப்பதாக கூறினார்.

அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவில் இருந்து பல்வேறு அம்சங்களை மற்ற நாடுகள் கற்றுக்கொள்வதாக திரு. ஓம் பிர்லா குறிப்பிட்டார்.

<<<<>>>>

வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக பணிநீக்கம் செய்யப்பட்ட 25 விமானப் பணியாளர்களை ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமான நிறுவனம் மீண்டும் பணியில் அமர்த்தியுள்ளது.

அவர்களுடைய கோரிக்கைகளை விமான நிறுவனம் பரிசீலிப்பதாக ஒப்புக்கொண்டதை அடுத்து பணியாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தை திரும்பப் பெற்றனர்.

முன்னதாக, முன்கூட்டியே தகவல் ஏதும் அளிக்காமல் மருத்துவ விடுப்பில் விமானப் பணியாளர்கள் சென்றதையடுத்து, சுமார் 85 விமான சேவைகள் நேற்று ரத்து செய்யப்பட்டன.

இதனால் பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு கட்டணத் தொகையை திரும்ப அளிக்கவோ, அல்லது மற்ற நாட்களில் பயணம் செய்ய அனுமதிக்கவோ விமான நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கிடையே இப்பிரச்சினை முடிவுக்கு வந்ததையடுத்து, 20 வழித்தடங்களில் 283 விமானங்கள் இயக்கப்படுவதை ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் நிறுவனம் உறுதி செய்துள்ளது.

<<<<>>>>

ஹரியானாவில் நிலவி வரும் அரசியல் சூழ்நிலைகளுக்கிடையே, ஆளுநர் திரு. பண்டாரு தத்தாத்ரேயாவை இன்று சந்திக்க விருப்பம் தெரிவித்து அம்மாநில காங்கிரஸ் கட்சியினர் கடிதம் வழங்கியுள்ளனர்.

அம்மாநில சட்டப்பேரவையின் காங்கிரஸ் கட்சி துணைத்தலைவர் திரு. அஃப்தாப் அகமது, கட்சி கொரடா திரு. **BB** பத்ரா உள்ளிட்டோர் ஆளுநரை சந்திக்க உள்ளதாக அக்கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து பேசிய ஹரியானா முன்னாள் முதலமைச்சர் திரு. பூபேந்தர்சிங் ஹூடா, காங்கிரஸ் பிரதிநிதிகள் ஆளுநரை சந்தித்து மாநிலத்தில் குடியரசுத்தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என்றும், சட்டப்பேரவைத் தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்றும் கோரிக்கை வைக்க உள்ளதாக கூறினார்.

இதற்கிடையே ஆளும் பிஜேபி அரசுக்கு அளித்து வந்த ஆதரவை 3 சுயேட்சை உறுப்பினர்கள் திரும்பப் பெற்றனர்.

இந்நிலையில் தேவைப்பட்டால் நம்பிக்கை வாக்கெடுப்பை சந்திக்க தயாராக உள்ளதாக ஹரியானா முதலமைச்சர் திரு. நயாப்சிங் சைனி அறிவித்துள்ளார்.

<<<<>>>>

ஜெர்மனியின் **Essen** நகரில் நடைபெற்ற உலக தடகள போட்டியின் ட்ரிபிள் ஜம்ப் பிரிவில் இந்தியாவின் **Eldhose Paul** தங்கப் பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் 16 புள்ளி ஐந்து ஐந்து மீட்டர் தூரம் தாண்டி அவர் இப்பதக்கதைக் கைப்பற்றினார்.

-------------

இத்தாலியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஸ்ரீராம் பாலாஜி – ஜெர்மனியின் ஆண்ட்ரே பெக்மென் இணை அரை இறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 1-6, 6-4, 12-10 என்ற செட் கணக்கில் பல்கேரியாவின் **Andreev** – போலந்தின் **Kasnikowski** இணையை வென்றது.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 60 ரன் வித்தியாசத்தில் பஞ்சாப் அணியை வென்றது.

தரம்சாலாவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த பெங்களூரு அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 241 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக விராட் கோலி 47 பந்துகளில் 92 ரன் எடுத்தார்.

242 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பஞ்சாப் அணி, 17 ஓவரில் 181 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

பெங்களூரு அணியின் பந்துவீச்சாளர்கள் முகமது சிராஜ் 3 விக்கெட்டையும், ஸ்வப்னில் சிங், ஃபெர்கியுசன், கரன் ஷர்மா ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினார்கள்.

இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் சென்னை அணி குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

அகமதபாதில் நடைபெற உள்ள இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

--------------

ப்ரோ ஹாக்கி லீக் போட்டியில் பங்கேற்கும் 24 வீரர்களைக் கொண்ட இந்திய அணியை ஹாக்கி இந்தியா அறிவித்துள்ளது.

இப்போட்டி **Antwerp, Belgium, London** ஆகிய இடங்களில் இம்மாதம் 22ஆம் தேதி தொடங்கி அடுத்த மாதம் 12ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

-----------------

**Saudi Smash** டேபிள் டென்னிஸ் போட்டியில் மகளிர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் மணிகா பத்ரா, ஜப்பானின் **Hina Hayata**-விடம் தோல்வியடைந்தார்.

<<<<>>>>

பாகிஸ்தானின் உளவுப் பிரிவான ஐ.எஸ்.ஐ-க்கு தகவல் தெரிவித்து வந்ததாக குஜராத் மாநில பரூச் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் உற்பத்தி செய்யும் ட்ரோன்கள் தொடர்பான தகவல்களை அந்த நபர் அளித்து வந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இதுபோல் பாதுகாப்புத்துறையில் பணியில் இருப்பவர்களை தொடர்புகொள்ள ஐ.எஸ்.ஐ முயற்சிப்பதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

<<<<>>>>

ராஜஸ்தான் மாநிலத்தில் இன்றும், குஜராத் மாநிலத்தில் அடுத்த இரண்டு நாட்கள் வரையும் கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்குவங்கம், சிக்கிம், பீகார், ஒடிசா, ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் இடியுடன் கூடிய மழை இன்று முதல் அடுத்த 2 நாட்கள் வரை பெய்யக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

நாட்டின் வடகிழக்குப் பகுதியில் கனமழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் கூறியுள்ளது.

மேலும் நாட்டின் தென்பகுதியில் அடுத்த 2 முதல் 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஈரான் அரசால் சிறைபிடிக்கப்பட்டிருந்த 5 இந்தியர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய தூதரகம் அந்நாட்டு அரசுடன் மேற்கொண்ட பேச்சுகளை அடுத்து ஈரான் இம்முடிவை மேற்கொண்டுள்ளது.

இந்தியர்களை விடுவிப்பதற்காக அங்குள்ள இந்திய தூதரகத்துடன் இணைந்து செயல்பட்ட ஈரான் அதிகாரிகளுக்கு இந்திய தூதரகம் நன்றி தெரிவித்துள்ளது.

முன்னதாக இஸ்ரேலுக்கு சொந்தமான சரக்குக் கப்பலை ஈரான் கடற்படை கடந்த ஏப்ரல் மாதம் பறிமுதல் செய்து அதில் பயணம் செய்த 17 இந்தியர்களை சிறைபிடித்தது.

<<<<>>>>

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் நேற்று ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளது.

காயமடைந்து சிகிச்சை பெற்று வருபவர்களை மாநில வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விதிமுறைகளை மீறும் பட்டாசு ஆலைகள் மீது தேர்தல் நடத்தை விதிமுறைகள் முடிந்த பின் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

இதனிடையே பட்டாசு ஆலையில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய தாம் பிரார்த்திப்பதாக அவர் கூறியுள்ளார்.

**<<<<the end>>>>**